සියලුම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது
All rights Reserved

අධිකරණ සහ ජාතික ඒකාබද්ධතා අමාත්‍යාංශය
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு
Ministry of Justice and National Integration

දිවුරුම්දුන් භාෂා පරිවර්තකයන් පත්කිරීම සඳහා වන විභාගය - 2024
சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்களை நியமிப்பதற்கான பரீட்சை - 2024
Examination for the Appointment of Sworn Translators – 2024

පරිවර්තනය (දෙමළ / ඉංග්‍රීසි)
மொழிபெயர்ப்பு (தமிழ் / ஆங்கிலம்)
Translation (Tamil / English)

කාලය: පැය 1 ½ | මුළු ලකුණු : 100
நேரம்: 1 ½ மணித்தியாலம் | மொத்தப் புள்ளிகள்: 100
Time: 1 ½ Hours | Total Marks: 100

සියලුම ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.
எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
Answer all the Questions.

**1. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும்.**

**அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான ஐக்கிய இராச்சியத்தின் வர்த்தகத் திட்டத்தின் கீழ் "பிராந்தியங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு" என்பதன் பொருட்டு வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையினாலும் இந்தோனேஷியாவினாலும் கூட்டு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல்**

ஐக்கிய இராச்சியம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகியதன் பின்னர், ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வர்த்தக முன்னுரிமைகளைப் பேணும் பொருட்டு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான வர்த்தகத் திட்டம் 2023 யூன் மாதம் தொடக்கம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது முன்னுரிமைத் திட்டத்தின் பயன் பெறுநர் ஒருவர் என்ற வகையில், ஐக்கிய இராச்சியத்தின் வர்த்தகத் திட்டத்தில் சுயமாக பயன் பெறுநர் ஒருவராகும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த திட்டத்தின் கீழான தகவுதிறன்களின் பிரகாரம் உரிய முன்னுரிமை திட்டத்தின் நலன்களை இலங்கை புடைவைக் கைத்தொழில் சார்பில் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், உள்நாட்டில் நெய்யப்பட்ட துணிகளை மூலப் பொருளாக பயன்படுத்தி தைத்த ஆடைகளை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. ஆயினும், உள்நாட்டில் நெய்யப்பட்ட துணி வகைகளின்

உற்பத்தி போதுமானதாக இல்லாததன் காரணத்தினால் ஐக்கிய இராச்சியத்தின் வர்த்தகத் திட்டத்தின் கீழ் முன்னுரிமை நலன்களை பயனுள்ள வகையில் பெற்றுக் கொள்வதற்கு இந்நாட்டு புடைவை உற்பத்தியாளர்களுக்கு இயலாமற்போயுள்ளது. ஆயினும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான வர்த்தகத் திட்டத்தின் தகவுதிறன்களுக்கு அமைவாக முன்னுரிமை நலன்கள் உரித்துடைய பிராந்தியக் குழுவொன்றிலுள்ள நாடொன்று உற்பத்தி செய்யும் உள்ளீடுகள் / பொருட்கள் அத்தகைய முன்னுரிமை நலன்கள் உரித்துடைய பிரிதொரு பிராந்தியக் குழுவொன்றிலுள்ள நாடொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தியொன்றில் உள்ளடக்கப்பட்டவிடத்து அவை குறித்த இறுதி உற்பத்தி செய்யும் நாட்டில் பூர்த்தி செய்யப்பட்ட பொருளாக கருதுவதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டடுள்ளன. குறித்த தகவுதிறனை "பிராந்தியங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு" ஆக அறிமுகப்படுத்தப்படுவதோடு, இதன் மூலம் குறித்த இரு நாடுகளினதும் ஏற்றுமதியாளர்களுக்கு நலன்கள் கிடைக்கப் பெறுவதற்கான சாத்தியம் நிலவுகின்றது.

(25 புள்ளிகள்)

**2. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும்.**

(1) ["தகைமை பெற்ற கணக்காய்வாளராக இருக்க வேண்டியவரும் சனாதிபதியினால் (அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்திற்கமைய) நியமிக்கப்பட வேண்டியவருமான கணக்காய்வாளர் தலைமையதிபதியொருவர் நன்னடத்தையின்போது பதவி வகித்தல் வேண்டும்."]

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும். அது, அவரது பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலாகாது.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பதவி -

(அ) அவர் இறப்பதன்மேல் வறிதாதல் வேண்டும்.

(ஆ) அவர் பதவியிலிருந்து விலகுவதாகச் சனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிப்பதன்மேல் வறிதாதல் வேண்டும்.

(இ) அவர் அறுபது வயதை அடைவதன்மேல் வறிதாதல் வேண்டும்.

(ஈ) சுகவீனம் காரணமாக, அல்லது உடற்பலவீனம் அல்லது மனப்பலவீனம் காணரமாக அவர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் வறிதாதல் வேண்டும். அல்லது,

(உ) அவரைப் பதவியிலிருந்து அகற்றுமாறு கூறும் பாராளுமன்றத்தின் பிரேரணையின் பேரில் அவர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் வறிதாதல் வேண்டும்.

(25 புள்ளிகள்)

**3. Translate into Tamil.**

**The following matters pertaining to the formulation of new legislation/ laws or amendments to an existing law:**

(a) To draft new legislation/laws or amending legislation to an existing law pertaining to the subjects and functions assigned to the Cabinet Ministry and the State Ministries coming under the purview of the said Ministry and to instruct the Legal Draftsman to pursue action accordingly.

(b) To publish the draft Bill formulated by the Legal Draftsman in the Government Gazette on receipt of clearance of the Attorney General and to present the same thereafter in Parliament for approval.

(c) If it is intended to introduce amendments to a draft Bill presented in Parliament that would affect the core of a Bill approved by the Cabinet, at the Committee Stage of the said Bill in Parliament, such amendments.

(d) To present the Regulations or Notifications made by virtue of the powers vested with the Ministers under various Acts, with the concurrence of the Legal Draftsman in Parliament, subsequent to publishing the same in the Government Gazette.

(25 Marks)

**4. Translate into Tamil.**

**1. Official Languages Proficiency (Sinhala/Tamil) to be acquired by public officers to whom proficiency level 1 is applicable, in addition to the official language in which each officer entered the public service, as recommended by the Expert Committee:**

**1.1 Goal:**

To develop an appreciation and an awareness of socio-cultural differences among speakers of Sinhala and Tamil for the effective implementation of the Official Languages Policy

**1.2 Objectives:**

(a) to be able to communicate in the target language in its written and spoken forms in order to perform complex administrative duties;

(b) to skillfully use the language in order to perform complex language functions such as persuasion, commendation, rejection etc.

(c) to be able to appreciate the socio-cultural values of the target language speakers.

(d) to be able to translate a range of texts into the target language.

(25 Marks)